# ஸ்ரீ மணவாளமாமுனிகள் தீர்த்தம்
## மாசி மாதம் க்ருஷ்ண பக்ஷத்வாதசி

கும்பம்பாஸ்வதியாதி தத்ஸு தத்திநேபக்ஷே வளர்க்ஷேதரே
த்வாதஸ்யாம் ச்ரவணர்க்ஷ பாஜிருதிரோத்கார்யாக்ய ஸம்வத்ஸரே।
தீபக்த்யாதி குணார்ணவோ யதிபராதீநாகிலாத்மஸ்திதி
ஸ்ரீவைகுண்ட மகுண்ட வைபவ மகாத் காந்தோ பயந்தாமுநி: ॥


ஸ்ரீ வரவரமுனி தாஸ ஜன ஸபா
புதிய எண் 9, (பழைய எண் 3/2 A-2), நாகோஜிராவ் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
போன் : 2844 0021

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# ஸ்ரீமந் மணவாளமாமுனிகளின் திருவத்யயநம்-தீர்த்தம்

(ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்)

ஓர் ஆசார்ய ஸார்வபௌமர் நலமிந்தமில்லதோர் திருநாட்டை அலங்கரித்த (பரமபதித்த) நாளை ப்ரதி வருஷமும் கொண்டாடும்போது அந்நாள் திருவத்யயநம்-தீர்த்தம் எனப்படும்.

பொதுவாக ஒருவர் முடிந்த நாளை திதி, திவஸம், ஶ்ராத்$_3$த$_4$ம், என்பர்.

ஆனால் ஸ்ரீவைஷ்ணவர்களின் வ்யவஹாரம், திருவத்யயநம், தீர்த்தம் என்பதாம்.

இப்படி வ்யவஹரிக்கைக்கு முக்யகாரணம்-அன்றைய தினம் திருவாய்மொழி ஸேவிக்கச்செய்வதும், ஸ்ரீபாததீர்த்தம் பெறுவதுமாம்.

இவைகள் இரண்டுமே தம் தம் பிதாவைக் குறித்தும் ஆசார்யனைக் குறித்தும் புத்ரர்களுக்கும் ஶிஷ்யர்களுக்கும் அவஶ்யம் செய்யத்தக்கதாகும்.

முக்யமாக ஶிஷ்யன் தன் ஆசார்யன் பிறந்த நாளையும் பரமபதித்த நாளையும் வருஷந்தோறும் கொண்டாடவேணும், பிறந்தநாளைக் கொண்டாடுவதை திருநக்ஷத்திர பரிபாலனம் என்றும், பரமபதித்த நாளைக் கொண்டாடுவதை திருவத்யயந தீர்த்த பரிபாலனம் என்றும் சொல்லுவார்கள்.

பரமபதித்தநாளுக்கு முன் தினம் ராத்ரி திருவாய்மொழி தொடங்கி இரண்டுபத்து மட்டிலும் ஸேவிக்கவேணும். கோஷ்டிக்கு தோசை, வடை, சுண்டல் விநியோகம் பண்ணவேணும்,

மறுநாள் திருவாய்மொழி முழுவதும் ஸேவிக்கப்பண்ணி சாத்துமுறையும்நடத்தி ஸ்வாசார்யனின் பாதுகையில் ஸ்ரீபாத தீர்த்தத்தையும், பெறவேணும். புத்ரன் தன் பிதாவுக்கும் திருவாய்மொழி ஸேவைநடத்தி முறைப்படி ஶ்ராத்₃த₄ம் நடத்தி நிமந்த்ரண ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாததீர்த்தம் பெறவேணும்.

ஆகவே அந்நாள், திருவத்யயநம் - தீர்த்தம் என வழங்கப் படுகிறது.

ஆழ்வார் தொடங்கி எம்பெருமானார் நடுவாக மாமுனிகள் ஈறாகவுள்ள நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஓராண்வழி குரு பரம்பரையிலுள்ள ஆசார்யர்கள் அனைவருக்கும், மற்றுமுள்ள ஆசார்யர்களுக்கும் அவரவர்களிடத்து நேரே ஸமாஶ்ரயணம் பெற்றவர்கள் இப்போதில்லையாகையால் அவர்களுக்கு நாம் யாரும் திருவத்யயநம் கொண்டாடுவதில்லை. திருநக்ஷத்திரம் மட்டிலுமே கொண்டாடப்படுகிறது.

ஆனால், மாமுனிகளுக்கு மட்டிலுமே பரமபதித்த அந்நாள் கொண்டாடப்படுகிறது. அதிலும் ஸ்ரீரங்கம் திருப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மாமுனிகள் ஸந்நிதியில்தான் கொண்டாடப்படுகிறது. மற்ற ஆசார்யர்களுக்கில்லாமலும், மற்ற திவ்யதேஶங்களில் மணவாளமாமுனிகளுக்குமில்லாமலும் கோயில் என்கிற ஸ்ரீரங்கத்தில் மட்டுமே திருவத்யயநம் கொண்டாடுகைக்குக் காரணமாவது-

ஸ்ரீரங்கநாதன் மாமுனிகளை ஆசார்யனாகக்கொண்டு தான் அவருக்குச் சிஷ்யனாய் திருவாய்மொழியின் வ்யாக்யாநங்களை ஒரு வருஷகாலம் அவரிடம் திருச்செவிசாத்தி சாற்றுமுறையன்றைக்கு, தான் அவருக்குச் சிஷ்யனானமைதோற்ற ஓர் பாலனாய் "ஸ்ரீஶைலேஶ" என்னும் தனியனை அருளிச்செய்தான் என்பது ப்ரஸித்தம், அதுமுதல் மாமுனிகளின் வருஷதிருக்ஷத்திரந்தோறும் பெரியபெருமாள் ஸந்நிதியிலிருந்து விஶேஷப₃ஹுமாநம் வந்து மாமுனிகளின் திருநக்ஷத்திர பரிபாலநம் நடத்தப்பட்டுவருகிறது.

அதேபோல மாமுனிகள் பரமபதித்தவன்று தொடங்கி வருஷந்தோறும் மாமுனிகள் பரமபதித்த நாளான மாசி க்ருஷ்ண த்வாதசியன்று பெரியபெருமாள் ஸந்நிதியிலிருந்து விசேஷ

பூஹூமாநம் வந்து திருவத்யயநோத்ஸவமும் கொண்டாடப்படுகிறது.

மாமுனிகள் பரமபதித்தபோது பெரியபெருமாள் தாம் அவர்க்கு ஶிஷ்யனானமைதோற்ற ப்ரதிவருஷமும் திருவத்யயநம்-தீர்த்தம் கொண்டாடவேண்டும் என நியமித்தாராம், மாமுனிகளிடம் ஆஶ்ரயித்த ஶிஷ்யரான ரங்கநாதன் இன்றைக்கு மெழுந்தருளியிருப்பதால் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே மாமுனிகள் ஸந்நிதியில் மாமுனிகளுக்குத் திருவத்யயநம் - தீர்த்தம் கொண்டாடப்படுகிறது.

தீர்த்தம் கொண்டாடும் விதம்: தீர்த்தத்தின் முதல்நாள் ராத்ரி 7 மணிக்கு மாமுனிகள் ஸந்நிதியில் திருவாய்மொழி தொடக்கமாகி முதலிரண்டுபத்துக்கள் மட்டிலும் ஸேவிக்கப்படுகிறது. அப்போது கோஷ்டிக்குத் தீர்த்தம், வடை, திருப்பணியாரம், சுண்டல் விநியோகமாகிறது. மறுநாள் காலை 10 மணி தொடங்கி திருவாய்மொழி பூர்ணமாய் ஸேவிக்கப்படுகிறது. அப்போது ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலிருந்து ப்ரஸாதம் உடுத்துக்களைந்த திருப்பரியட்டம் திருமாலை முதலியன வாத்யத்துடன் கைங்கர்யபரர்களால் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரப்பட்டு மாமுனிகளுக்குச் சாத்தப் படுகின்றன. பெரியஸந்நிதி அர்ச்சகர் எழுந்தருளி மாமுனிகளுக்கு ப்ரஸாதங்களை அமுதுசெய்யப் பண்ணுவர் பிறகு கோஷ்டிக்குத் தீர்த்த ப்ரஸாதங்கள் விநியோகிக்கப்படுகின்றன. திருவாய்மொழி சாற்றாகிறது. கோஷ்டிக்குமட்டிலும் பொன்னடியானாகி கோஷ்டி கலைகிறது. மறுபடியும் மணவாளமாமுனிகள் கர்ப்பக்ருஹத்துக்குப் பின்புள்ள மணவாள மாமுனிகள் காலக்ஷேபம் ஸாதித்த இடமான திருமலையாழ்வாரின் மாமுனிகள் பரமபதித்ததும் அங்கேயே ஆகையாலே, அத்யாபகஸ்வாமிகளால் கோயில் திருவாய்மொழி, இராமாநுசநூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதிகள் ஸேவிக்கப்பெற்று, அங்கிருந்து வந்து மாமுனிகள் திருமுன்பே சாத்தாகி, கோஷ்டிக்குத் தீர்த்தமும் பொன்னடியானும் ஸாதிக்கப்பட்டு, தொட்டி ப்ரஸாத விநியோகத்துடன் மாமுனிகள் திருவத்யயந-தீர்த்த உத்ஸவம் நிறைவுபெறுகிறது.